நகரமன்றம் குடியாத்தம் நாள்: 07.08.2018

# அறிவிப்பு

2018–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7–ம் தேதி செவ்வாய் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகராட்சி தனி அலுவலர் அவர்கள் அறையில் நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள பொருள்களை முடிவு செய்ய நகரமன்றத்தின் சாதாரணக் கூட்டம் நடைபெறும்.

**முன்னிலை : திரு.ச.செல்வபாலாஜி, பி.இ., தனி அலுவலர்**

## நிகழ்ச்சி நிரல்

1. இந்நகராட்சி சந்தைப்பேட்டை 5.70 இலட்சம் லிட்டர் நீர்தொட்டி வளாகத்தில் பயன்பாட்டில் இருந்துவரும் ஆழ்துளை கிணற்றில் பொருந்தியுள்ள 30,000 லிட்டர் OHT-க்கு செல்லும் 7.5எச்.பி 15Stage கொண்ட நீர்மூழ்கி மின்மோட்டார் மற்றும் பம்புசெட், 2″ GI பைப்கள் துருபிடித்து பழுதடைந்து குடிநீர் வினியோகம் பாதிப்பு ஏற்பட்டது. தற்பொழுது கோடை காலமாகவும், திருவிழா காலமாகவும் இருப்பதால் பொதுமக்களின் குடிநீர் அவசியம் கருதி மேற்படி மோட்டார் பம்புசெட் பழுதுபார்த்து புதியதாக 2″ UPVC பைப்-72மீட்டர் வாங்கி பொருத்தி உடனடியாக பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டி தமிழ்நாடு நகராட்சிகளின் அவசர சட்டம் 1920-ம் ஆண்டு பிரிவு எண்.15-ன் கீழ் மேற்படி பணிகளை நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.ஜெ.ஜெ.ஆனந்தகுமார் அவர்களின் மூலம் செய்து முடித்தமைக்கான தொகை ரூ.31,820/- செலவு செய்யப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. பொதுமக்களின் குடிநீர் அவசியம் கருதி பணியினை மேற்கொண்டதையும் அதற்கான செலவினத்தையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்:-** இ1/399/2017

2. இந்நகராட்சி வார்டு எண்.16,17,24,25 மற்றும் 27 பகுதிகளில் பயன்பாட்டில் இருந்து வந்த மின்மோட்டார்கள் பழுதடைந்துள்ளதாக பொதுமக்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரப்பெற்றதையெடுத்து கீழ்காணும் வார்டுகளில் உள்ள தெருக்களில் பழுதடைந்த மின்மோட்டார்களை பொதுமக்கள் குடிநீர் அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகளின் அவசர சட்டம் 1920-ம் ஆண்டு பிரிவு எண்.15-ன் கீழ் பழுதுபார்க்க திரு.ஜெ.ஜெ.ஆனந்தகுமார் ஒப்பந்ததாரர் அவர்களின் மூலம் பணியினை செய்து முடித்தமைக்கான செலவீனத்தை மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | தெருவின் பெயர் | தொகை ரூபாய் |
|---|---|---|---|
| 1 | 24 | கங்கையம்மன் கோவில் அருகில் மின்மோட்டார் பழுதுபார்த்ததற்கு லேபர்சார்ஜ் உள்பட | 7470.00 |
| 2 | 25 | பாண்டியன் தெருவில் மின்மோட்டார் பழுதுபார்த்ததற்கு லேபர்சார்ஜ் உள்பட | 3715.00 |
| 3 | 16 | சுண்ணாம்புபேட்டை புதுதெருவில் உள்ள மின்மோட்டார் பழுதுபார்த்தல் சர்வீஸ் ஒயர் மாற்றியமைததற்கு லேபர்சார்ஜ் உள்பட | 6860.00 |
| 4 | 17 | மண்ணடி ராமசாமி தெருவில் மின்மோட்டார் பழுதுபார்த்ததற்கு லேபர்சார்ஜ் உள்பட | 7970.00 |
| 5 | 27 | பாவோடும் தோப்பு 7.5எச்.பி பேனல்போர்டு பழுதுபார்த்ததற்கு லேபர்சார்ஜ் உள்பட(15000லிட்டர்OHT) | 3600.00 |
| | | **மொத்தம் ரூ.** | **29615.00** |

**அலுவலக குறிப்பு:-** மன்றம் பதிவு செய்யலாம். **கோப்பு எண்:-** இ1/399/2017

3. இந்நகராட்சி வார்டுஎண்.7, 23 மற்றும் 36 ஆகிய பகுதிகளிலிருந்து மின்மோட்டார் பழுதடைந்துள்ளதாக விண்ணப்பங்கள் வரப்பெற்றதையெடுத்து அதற்கான பழுதுபார்க்கும் பணியினை செய்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டி தமிழ்நாடு நகராட்சிகளின் அவசர சட்டம் 1920-ம் ஆண்டு பிரிவு எண்.15-ன் கீழ் கீழ்காணும் பணிகளை கீழ்வருமாறு

| வ. எண் | தெருவின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | வார்டு எண்.7 கஸ்பா காலனி பொது கழிப்பிடம் மின்மோட்டார் பழுதுபார்த்தல் பணி | 4700.00 |
| 2 | வார்டு எண்.23 இராசி அருணாசலம் தெருவில் மின்மோட்டார் பழுதுபார்த்தல் பணி | 2220.00 |
| 3 | வார்டு எண்.23 சாய கிருஷ்ணப்பன் தெருவில் மின்மோட்டார் பழுதுபார்த்தல் பணி | 9970.00 |
| 4 | வார்டு எண்.36 நிஜாமுதீன் தெருவில் மின்மோட்டார் பழுதுபார்த்தல் பணி | 5640.00 |
| 5 | வார்டு எண்.36 தாழையாத்தம் காலனி பொதுகழிப்பிடம் மின்மோட்டார் பழுதுபார்த்தல் பணி | 7290.00 |
| 6 | வார்டு எண்.36 கூடநகரம் நகராட்சி முஸ்லீம் பெண்கள் பள்ளி அருகிலிருந்து நிஜாமுதீன் தெருவிற்கு செல்லும் மின்மோட்டார் பழுதுபார்த்தல் பணி | 4960.00 |
| | **மொத்தம்** | **34780.00** |

மேற்படி பணியினை திரு.ஜெ.ஜெ.ஆனந்தகுமார் ஒப்பந்ததாரர் மூலம் செய்து முடித்தமைக்கான தொகை ரூ.34780/- செலவினத்தை மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>** மன்றம் பதிவு செய்யலாம். **கோப்பு எண்:-** இ1/399/2017

4. இந்நகராட்சி வார்டு எண்.9,24,34,35 மற்றும் 36 ஆகிய பகுதிகளில் மின்மோட்டார் பழுதுதடைந்துள்ளதாக பொதுமக்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரப்பெற்றதையெடுத்து பொதுமக்களின் குடிநீர் அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகளின் அவசர சட்டம் 1920-ம் ஆண்டு பிரிவு எண்.15-ன் கீழ் கீழ்காணும் பணிகளை நகராட்சி பதிவுப்பெற்ற ஒப்பந்ததாரரான திரு.ஜெ.ஜெ.ஆனந்தகுமார் அவர்களின் மூலம் பணியினை செய்து முடித்தமைக்கான செலவினத் தொகை ரூ.38,890/- வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | தெருவின் பெயர் | தொகை ரூபாய் |
|---|---|---|---|
| 1 | 24 | கெங்கையம்மன் கோவில் பின்புறம் நரசிம்மசாமி தெருவில் மின்மோட்டார் பழுதுபார்த்தல் பேனல்போர்டு மாற்றியமைத்தல் | 5200.00 |
| 2 | 24 | கேபலாபுரம் மஜீத்தெருவில் முஸ்லீம் பள்ளி அருகில் மின்மோட்டார் பழுதுபார்த்தல் | 2470.00 |
| 3 | 24 | கோபலாபுரம் மஜீத்தெருவில் ரேஷன்கடை அருகில் மின்மோட்டார் பழுதுபார்த்தல் | 5100.00 |
| 4 | 34 | பீரான் நகரில் மின்மோட்டார் பழுதுபார்த்தல் | 5770.00 |
| 5 | 9 | ஜெ.சி.செட்டி தெருவில் மின்மோட்டார் பழுதுபார்த்தல் | 5220.00 |
| 6 | 36 | குடியாத்தம் நகர காவல் நிலையம் மின்மோட்டார் பழுதுபார்த்தல் | 7470.00 |
| 7 | 35 | பச்சையம்மன் கோவில் தெருவில் மின்மோட்டார் பழுதுபார்த்தல் | 7750.00 |
| | | **மொத்தம் ரூ.** | **38980.00** |

**<u>அலுவலக குறிப்பு:-</u>** மன்றம் பதிவு செய்யலாம். **கோப்பு எண்:-** இ1/399/2017

5. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் தூய்மை இந்தியா திடக்கழிவு மேலாண்மை மற்றும் திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து நகராட்சி ஆணையாளர் அவர்கள் பொதுசுகாதார பிரிவு பரப்புரை பணியாளர்கள் (Anomator's Office Room) அலுவலக அறையில் ஆய்வு கூட்டங்கள் நடத்தும் போது போதிய இடவசதியில்லாமல் சிரமமாக உள்ளதால் மேற்படி அறையில் ஏற்கனவே அமைந்துள்ள பழைய அலுமினிய தடுப்பினை 10′ அடி தூரம் தள்ளி அமைத்து ஆய்வு கூட்டங்களை நகராட்சி ஆணையாளர் அவர்கள் சிரமமின்றி நடத்திட போதிய இடவசதி ஏற்படுத்தும் வகையில் மேற்படி அலுமினிய தடுப்பினை மாற்றியமைக்கும் பணிக்கு உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில் விலைப்புள்ளிகள் வரப்பெற்றதின் விபரம் வருமாறு

| வ. எண். | ஒப்பந்ததாரர்களின் பெயர்(ம) முகவரி | விலைப்புள்ளி தொகை விவரம் ரூ. |
|---|---|---|
| 1 | திரு.ஜெ.ஜெ.ஆனந்தகுமார், ஒப்பந்ததாரர், எண்.24இ, ஆர்.எஸ்.ரோடு, குடியாத்தம் | 18425.00 |

| | | |
|---|---|---|
| 2 | சுரேஷ்கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரர்,<br>எண்.34 எஸ்.குப்பண்ணன் தெரு, பிச்சனூர், குடியாத்தம் | 18560.00 |
| 3 | திரு.டி.டி.ராமகிருஷ்ணன், ஒப்பந்ததாரர்,<br>எண்.18 பாவோடும் தோப்பு, நெல்லூர்பேட்டை, குடியாத்தம் | 18710.00 |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளை ஒப்புநோக்கு செய்யப்பட்டதில் குறைவான விலைப்புள்ளி வழங்கியுள்ள வ.எண்.1-ல் உள்ள திரு.ஜெ.ஜெ.ஆனந்தகுமார் அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கி பணியினை செய்திடவும் அதற்கான தொகை ரூ.18,425/- செலவு செய்திடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி பணியினை மேற்கொள்ளவும் அதற்கான தொகையினை பொது நிதியிலிருந்து வழங்கிடவும் மன்றம் அனுமதி வழங்கலாம். **கோப்பு எண்:-** இ1/399/2017

6. இந்நகராடசி பசுமாத்தூர் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து குடியாத்தம் நகருக்கு நீரேற்றும் 100 எச்.பி திறன் கொண்ட யூனிட்-I-ன் மோட்டார் பம்பு செட்டின் கப்புல்டு பொருத்தி 15வருடங்கள் ஆன காரணத்தால் மேற்படி Pully Block அதனின் செயல்திறன் இழந்து கடந்தவாரம் (Pully Block) 09.07.18-ம் தேதி இரவு உடைந்து மேற்படி யூனிட்-I 100எச்.பி மின்மோட்டாரின் சென்ட்ரிபுகல் பம்பு செட் இயங்காமல் குடிநீர் விநியோகம் பாதிப்பு ஏற்பட்டது. பொது மக்களின் குடிநீர் அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகளின் அவசர சட்டம் 1920-ம் பிரிவு எண்.15-ன் கீழ் விலைப்புள்ளி கோரியதில் அதன் விபரம் வருமாறு

| வ. எண். | ஒப்பந்ததாரர்களின் பெயர்(ம) முகவரி | விலைப்புள்ளி தொகை விவரம் ரூ. |
|---|---|---|
| 1 | திரு.ஜெ.ஜெ.ஆனந்தகுமார், ஒப்பந்ததாரர்,<br>எண்.24இ, ஆர்.எஸ்.ரோடு, குடியாத்தம் | 20130.00 |
| 2 | சுரேஷ்கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரர்,<br>எண்.34 எஸ்.குப்பண்ணன் தெரு, பிச்சனூர், குடியாத்தம் | 20250.00 |
| 3 | திரு.டி.டி.ராமகிருஷ்ணன், ஒப்பந்ததாரர்,<br>எண்.18 பாவோடும் தோப்பு, நெல்லூர்பேட்டை, குடியாத்தம் | 20650.00 |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளை ஒப்புநோக்கு செய்யப்பட்டதில் குறைவான விலைப்புள்ளி வழங்கியுள்ள வ.எண்.1-ல் உள்ள திரு.ஜெ.ஜெ.ஆனந்தகுமார் அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கிடவும், அதற்கான செலவுத்தொகை ரூ.20,130/-ஐ மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. குடிநீர் அவசியம் கருதி மேற்படி பணியினை செய்து முடித்தமைக்கும் அதற்கான தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம். **கோப்பு எண்:-** இ1/399/2017

7. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடித எண்.13277/2017/குவ1 நாள்:27.06.2018-ன் படி நகராட்சிகளில் குடிநீர் அபிவிருத்தி திட்டத்தினை நடைமுறைபடுத்தும் பொருட்டு புதிய குடிநீர் இணைப்புகள் பெறுவதற்கு நிர்ணயம் செய்யப்பட்ட குடிநீர் வைப்புதொகை கட்டணம், இணைப்பு கட்டணம் ஆகியவற்றை ஒரே தவணையில் செலுத்தப்பட்டுவந்ததை எளிதாக்கும் பொருட்டு மேற்காணும் கட்டணங்கள் 10 தவணைகளாக சொத்து வரியுடன் சேர்த்து வசூல் செய்யும் பொருட்டு URBAN TREE SOFTWARE (UTIS) மென்பொருள் செயலாக்கம் உருவாக்கப்பட்டு உள்ளதனை நடைமுறைக்கு கொண்டுவரும் பொருட்டு இந்நகராட்சியில் புதிய குடிநீர் இணைப்பு பெறும் வீட்டு உரிமையாளர்களிடம் 10 தவணை முறையில் சொத்துவரியுடன் குடிநீர் இணைப்பு வைப்புதொகை மற்றும் இணைப்பு கட்டணம் ஆகியவற்றை தவணைமுறையில் பெற்று குடிநீர் இணைப்பினை பொதுமக்கள் பெறும் வழியினை எளிதாக்கும் பொருட்டு மேற்கண்டவாறு திருத்தம் செய்வதற்கு மன்ற அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. குடிநீர் இணைப்பு வழங்குவதை எளிதாக்கும் பொருட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. குடிநீர் உபவிதிகளில் உரிய திருத்தம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.**இ2/8816/2008

8. இந்நகராட்சிக்கு சொந்தமான உள்ளி உரக்கிடங்கில் 24.02.2018 அன்று குப்பைகள் தீப்பிடித்து எரிந்தத்ன பேரில் தீயணைப்பு துறை மூலம் தீயை அனைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதில் அவ்விடத்தில் போதுமான தண்ணீர் வசதி இல்லாத காரணத்தால் உடனடியாக வாடகை அடிப்படையில் டிராக்டர் மூலம் தண்ணீர் விநியோகம் செய்து தீயை கட்டுப்படுத்தப்பட்டது. மேற்காணும் பணிக்கு 25 டிரிப் டிராக்டர் தண்ணீர் வினியோகம் செய்யப்பட்டதற்கு ஆன செலவினம் ரூ.11,375/-ஐ நகராட்சி ஒப்பந்ததாரர் திரு.எஸ்.முருகன் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.
**அலுவலக குறிப்பு :** பணியின் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதித்து செலவினத்தொகைக்கு ஒப்புதல் வழங்கலாம்.

9. இந்நகராட்சி வார்டு எண்.15-ல் உள்ள கட்டபொம்மன் 1வது, 2வது மற்றும் 3வது தெரு மற்றும் பால வினாயகர் கோவில் தெரு மற்றும் குறுக்கு தெருவில் இதுவரை குடிநீர் பகிர்மான குழாய் இல்லாத காரணத்தால் மேற்படி தெருக்களில் உள்ள வீடுகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் இணைப்பு வழங்க முடியவில்லை தற்போது அப்பகுதி பொதுமக்கள் குடிநீர் பகிர்மானகுழாய் அமைத்தால் வீட்டு குழாய் புதியதாக இணைப்பு பெற 24.07.2018-ம் தேதிய விண்ணப்பத்தில் தெரிவித்ததின் அடிப்படையில் மேற்படி பகுதியான நேரடி ஆய்வு செய்து புதியதாக 3″பிவிசி (90mmØ) பகிர்மான குழாய் மற்றும் 3″சுலீஸ் வால்வு அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்டதில் மதிப்பீடு ரூ.2,36,000/- ஆகும். குடிநீர் பணி என்பதால் பணியின் அவசியம் கருதி நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.
**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. 2018-19-ம் ஆண்டு திருத்திய வரவு மற்றும் செலவு திட்டத்தின் கீழ் பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.இ2/1812/2018

10. குடியாத்தம் நகராட்சி பொதுநிதியின் 2017-18-ன் கீழ் ரூ.1.90 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.7 கஸ்பா தண்டபாணி கோவில் தெருவில் உள்ள சுகாதார கழிப்பிடங்களை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு, 24.11.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு, 30.11.2017 அன்று பணி உத்தரவு திரு.எஸ்.முருகன், ஒப்பந்ததாரருக்கு (0.02% மதிப்பீட்டை விட குறைவாக) வழங்கப்பட்டது. கஸ்பா தண்டபாணி கோவில் தெருவில் உள்ள கழிப்பிடத்தில் பராமரிப்பு பணிகள் செய்ய ஒப்பந்ததாரர் அவர்கள் பணி மேற்கொள்ளும் போது அப்பகுதி மக்கள் மேற்கண்ட பணி செய்யக்கூடாது என ஆட்சேபம் தெரிவித்ததின் அடிப்படையில் மேற்காணும் பணி தொடங்க இயலாமல் இருந்தது. இந்நிலையில் வார்டு எண்.29 புத்தர் நகர் பகுதியில் உள்ள பொது கழிப்பிடம் மிகவும் பழுதடைந்து பொதுமக்கள் உபயோகப்படுத்தா நிலையில் உள்ளதாக அப்பகுதி மக்கள் உடன் பராமரிக்கப்பட வேண்டும் என்று சாலை மறியலில் ஈடுபட்டனர். அச்சமயம் தாசில்தார், காவல் ஆய்வாளர் மற்றும் நகராட்சி ஆணையர் அவர்கள் அப்பகுதி பொதுமக்களிடம் உடன் பணி மேற்கொள்ளப்படும் என உறுதி அளித்தனர். எனவே, பொதுமக்களின் அவசியம் கருதியும், சுகாதாரத்தை கருத்தில் கொண்டு புத்தர் நகர் கழிப்பிடப் பணிகள் உடனடியாக மேற்கொள்ள வேண்டி இருப்பதால் ஏற்கனவே நிர்வாக அனுமதி வழங்கி பணி உத்தரவு வழங்கப்பட்ட கஸ்பா தண்டபாணி கோவில் தெரு கழிப்பிடத்திற்கு பதிலாக புத்தர் நகர் கழிப்பிடத்தை பராமரிப்பு பணி மேற்கொள்ள அதே மதிப்பீட்டு தொகையில் அனைத்து பணிகளும் மேற்கொள்ளவும் மதிப்பீடு தொகைக்கு மிகாமல் (0.02% மதிப்பீட்டை விட குறைவாக) திரு.எஸ்.முருகன், ஒப்பந்ததாரர் மூலம் பணிமேற்கொள்ளவும், திருத்திய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் பொருள் வைக்கப்படுகிறது.
**அலுவலக குறிப்பு:-** 1. திருத்திய நிர்வாக அனுமதிக்கு மன்றம் அனுமதி வழங்கலாம். 2.திரு.எஸ்.முருகன் ஒப்பந்ததாரர், அவர்கள் மதிப்பீடு தொகைக்கு மிகாமல் (0.02% மதிப்பீட்டை விட குறைவு) செய்ததற்கும், தனி அலுவலர் அவர்கள் முன்அனுமதிப்பெற்று பணி மேற்கொண்டதையும், மன்றம் அனுமதி வழங்கலாம்.
**கோப்பு எண்:-** இ1/399/2017

11. இந்நகராட்சியில் சொத்துவரி விதிப்பு சம்பந்தமாக சென்னை உயர்நீதி மன்றத்தில் வாதி திரு.வி.எஸ்.சம்பத் அவர்கள் வரி உயர்வு செய்ததை எதிர்த்து W.P.No.15761/2018-ல் வழக்கு தொடரப்பட்டு மேற்படி வழக்கின் தீர்ப்பு 28.06.2018 அன்று வரப்பெற்றதன் பேரில் மேற்படி வழக்கில் நகராட்சி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் தி.R.P.பிரதாப்சிங் அவர்களுக்கு வழக்கறிஞர் கட்டணத் தொகையாக ரூ.15,000/- வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.
**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.அ2/1668/2018)

12. அரசாணை எண்.304 நிதி துறை நாள் : 13.10.2017-ன்படி ஒட்டுநர்களுக்கு சிறப்பு ஊதியம் ரூ.90/-யினை ஊதியத்தில் சேர்த்து வழங்க உத்தரவிட்டதன் பேரில் வரப்பெற்ற அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>** மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.1828/2018/சி1)

13. புதிய தொழில்வரி சட்டம் எண்.59/98-ன்படி 01.10.2018 முதல் தொழில்வரி திருத்தி அமைக்க அனைவரது கருத்துரைகள் மற்றும் ஆலோசனைகள் பெறுவதற்கான 16.06.2018-ம் தேதியன்று தினமலர் தினசரி நாளிதழில் ஒரு நாள் மட்டும் விளம்பரம் செய்தமைக்கு அதற்குண்டான விளம்பரக் கட்டணம் தொகை ரூ.6,468/-ஐ வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>** அனுமதிக்கலாம். (ந.க.எண்.9326/2018/அ5)

14. நகராட்சி பகுதிகளில் உள்ள கட்டிடங்களுக்கு சொத்துவரி சீராய்வு செய்ய கீழ்காணும் அரசாணைகள் வரப்பெற்றுள்ளது.

1. அரசாணை எண்.73 (MS) நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை (MA.IV)
2. அரசாணை எண்.76 (MS) நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்களல் துறை (MA.IV)

வரப்பெற்ற மேற்காணும் அரசாணைகள் குறித்த விவரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>** மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.அ2/1819/2018)

15. உதவி ஆணையர் மத்திய சுங்கவரித்துறை, வேலூர் அவர்களின் கடிதம் எண்.CNO.IV/16/111/2014 STC நாள் : 24.07.2017-ம் தேதிய கடிதத்தில் சேவைவரி தொகையினை ஒத்திசைவு (Service Tax Returns) File செய்து அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளதால், குடியாத்தம் நகராட்சி நவம்பர் 2107 முதல் மே 2018 வரை குத்தகைதாரரிடம் அசையா சொத்துக்கள் மீது பெறப்பட்ட சரக்கு மற்றும் சேவைவரி G.S.T. தலைப்பில் செலுத்தப்பட்டது. அத்தொகையினை பதிவேற்றம் செய்தும் கணக்கினை ஒத்திசைவு செய்ய (G.S.T. Return) வேண்டி தனியார் தணிக்கையாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. ஒத்திசைவு செய்ய கட்டணம் ரூ.7,000/- வழங்க கோரி 21.06.2018-ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

GSTR Return Filling Fees
7 Month x 1000
(Nov. 2017 to May 2018) - **ரூ.7000**

மேற்படி தொகை வழங்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.577/2015/அ1)

16. நகராட்சி சொந்தமான JCB 3DX வாகனம் TN23 BU2873 வண்டிக்கு இன்ஜின் ஆயில், கீர் ஆயில், முன் பகுதி டோப்பிளேட், முன் & பின் பகுதி கீத், டிப்பர் லேம்ப் சீல், முன் பகுதி லோடர் லேப் சீல், முன் பகுதி வால் பிளாக் ஓரிங்ஸ், முன் & பின் பகுதி புஸ்கீட் மற்றும் இதர பழுதுகள் சரி செய்ய TRR AUTOMOTIVE என்ற நிறுவனத்தின் மூலம் பொருட்கள் வாங்க ஆகும் செலவினம் ரூ.264247/- மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம். 2. நகரமன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று அரசு அங்கீகாரம் பெற்ற TRR நிறுவனத்திடமிருந்து JCB வாகனத்திற்கு தேவையான பொருட்கள் கொள்முதல் செய்யவும் தொகை வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.1517/2018/எச்1)

17. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு லாரி டம்பர் பிளேசர் லாரி எண். TN23 AU 1183-க்கு வண்டிக்கு கிளாச்பிளேட் மற்றும் பிரேக் ஓஸ் பெற பழுதுக்கள் சரி செய்து தர 27.06.2018 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டமைக்கு கீழ்கண்டுள்ள விலைப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1. | H.M.S.அன்சர் ஆட்டோ கேரேஜ்,<br>நெ.22/B, R.S.ரோடு, குடியாத்தம். | ரூ.12000/- |
| 2. | A.S.R. ஆயில் ஸ்டோர்ஸ்,<br>நெ.18/3, ஆர்.எஸ்.ரோடு, குடியாத்தம். | ரூ.13250/- |
| 3. | ஸ்ரீ பாலாஜி, ஆட்டோ எலக்ட்ரிக்கல் ஒர்க்,<br>நெ.23/A, ஆர்.எஸ்.ரோடு, குடியாத்தம். | ரூ.15110/- |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள வரிசை எண்.1 H.M.S.அன்சர் ஆட்டோ கேரேஜ் என்ற நிறுவனத்தின் குறைந்தபட்ச விலைப்புள்ளியை ஏற்று உத்திரவு வழங்கவும் தொகை வழங்கவும் அனுமதிக்கலாம்.

**<u>அலுவலக குறிப்பு :</u>** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.48/2016/எச்1)

18. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவுக்கு தேவையான சேர் சப்பை செய்ய 09.07.2018 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டமைக்கு கீழ்கண்டுள்ள விலைப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | ஒரு சேர் உண்டான தொகை GST உட்பட ரூ. |
|---|---|---|
| 1. | Sri Angaala Parameshwari Agencies & Contractors, F2, Municipal Building, Anna Street, Ambapuram. | ரூ.660/- |
| 2. | Sri Angala Parameswari Welding Works, Steel Furnitures, No.6, Bodipet Road, Gopalapuram, Gudiyatham. | ரூ.670/- |
| 3. | R.G.M Agencies & Contractors, E22, Municipal Building, Anna Street, Ambapuram, Gudiyatham. | ரூ.685/- |

வரப்பெற்ற முன்று விலைப்புள்ளியில் மதிப்பீட்டைவிட குறைவான விலைப்புள்ளிக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு: 1.** மன்றம் அனுமதிக்கலாம். 2. குறைந்த விலைப்புள்ளி அளித்த ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி ஏஜென்சிஸ் & கான்ட்ராக்ட் என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கவும் தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம். ந.க.**எண்.**1170/2016/எச்1.

19. குடியாத்தம் நகராட்சி காட்பாடி சாலை, இராஜில்பட்டி, திருமகள் மில்ஸ் அருகில் உள்ள 12" CI சுலீஸ் வால்வு 26.07.2018 அன்று வால்வு இயங்காத காரணத்தினால் வால்வு கழற்றி பார்த்தபொழுது வால்வின் பித்தளை செக்நெட் மரைகள் தேய்ந்து உள்ளது. இதனை எடுத்துவிட்டு புதியதாக பித்தளை செக்நெட் ஊற்றி மரைகள் கடைசல் செய்து வால்வில் பொருத்தப்பட வேண்டும். குடிநீர் விநியோகத்தின் அவசர அவசியம் கருதி வால்வு பராமரிப்பு பணி செய்ய நகராட்சிகளின் அவசர சட்டம் 1920-ன் பிரிவு 15-ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு ஒப்பந்ததாரர் திரு.டி.டி.ராமகிருஷ்ணன் அவர்களின் மூலம் பணி செய்து முடிக்கப்பட்டதற்கு ஆன செலவு தொகை ரூ.3,640/- வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகின்றது.

**<u>அலுவலககுறிப்பு:-</u>** குடிநீர் விநியோகத்தின் அவசர அவசியம் கருதி பணியினை செய்து முடித்ததற்கும் செலவு தொகை வழங்கியதை மன்றம் பதிவு செய்யலாம். **ந.க.எண்:-** இ1/399/2017.

20. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு லாரி TN23 AU 1182-க்கு தகுதி சான்று பெறும் பொருட்டு தமிழக அரசு உத்திரவுபடி வேக கட்டுபாடு கருவி பொருத்த வேண்டும் என வட்டார போக்குவரத்து அலுவலர் அவர்கள் தெரிவித்துள்ளபடி, மேற்படி வாகனத்திற்கு புதியதாக வேக கட்டுபாடு கருவி Sankar Arts Computer Stickers என்ற நிறுவனம் மூலம் கொள்முதல் செய்ய ஆகும் தொகை ரூ.5200/- மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>** பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை அனுமதிக்கலாம்.(ந.க.எண்.48/2016/எச்1)

21. இந்நகராட்சியில் நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2018–19 திட்டத்தின் கீழ் ரூ,500.00 இலட்சம் மதிப்பீட்டில் தார்சாலைகள்,சிமெண்ட் சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால்கள் அமைக்க நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் செயல்முறை கடித :12981/2018/இ3 நாள்:17.07.2018–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட விபரம் மன்றத்தின் அனுமதிக்கும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது,

| வ. எண் | வார்டு எண் | சாலையின் பெயர் | சாலையின் தன்மை | சாலையின் நீளம் | சாலையின் அகலம் | மதிப்பீடு தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|---|---|---|---|
| | | | சிப்பம் – I | | | |
| 1 | 1 | ஜஃபேதார் நகர் | சிமெண்ட் சாலை | 100.00 | 4.00 | 250.00 |
| 2 | 1 | கோஷா குலாமுதீன் தெரு | சிமெண்ட் சாலை | 80.00 | 4.00 | |
| 3 | 2 | அசனல்லிபேட்டை | தார் சாலை | 300.00 | 5.00 | |
| 4 | 5 | பாரதியார் தெரு | தார் சாலை | 150.00 | 5.00 | |
| 5 | 5 | வி.பி.கோவில் தெரு | தார் சாலை | 100.00 | 5.00 | |
| 6 | 7 | கஸ்பா புதுமனை | தார் சாலை | 350.00 | 5.00 | |
| 7 | 8 | சக்தி நகர் | தார் சாலை | 200.00 | 4.50 | |
| 8 | 8 | தங்கள இராமசாமி தெரு | தார் சாலை | 150.00 | 4.50 | |
| 9 | 8 | அசேன் தெரு | தார் சாலை | 130.00 | 4.50 | |
| 10 | 8 | நீலி கோவிந்தப்பன் தெரு | சிமெண்ட் சாலை | 50.00 | 4.50 | |
| 11 | 9 | ஜெ.சி தெரு | தார் சாலை | 90.00 | 4.50 | |
| 12 | 10 | எஸ்.குப்பண்ணன் தெரு | தார் சாலை | 350.00 | 5.00 | |
| 13 | 11 | ராஜா நகர் | தார் சாலை | 150.00 | 4.50 | |
| 14 | 12 | ஆசிரியர் காலனி மற்றும் குறுக்கு தெரு ராமலிங்கா நகர் | தார் சாலை | 310.00 | 5.00 | |
| 15 | 12 | சத்யா நகர் | தார் சாலை | 90.00 | 4.50 | |
| 16 | 12 | MGR நகர் | தார் சாலை | 150.00 | 5.00 | |
| 17 | 13 | R.S.நகர் | தார் சாலை | 250.00 | 4.50 | |
| 18 | 13 | அருணாச்சல நகர் | தார் சாலை | 200.00 | 5.00 | |
| 19 | 14 | வைதீஸ்வரன் நகர் குறுக்கு தெரு | தார் சாலை | 250.00 | 5.00 | |
| 20 | 14 | நேருஜி நகர் பாரதியார் தெரு | தார் சாலை | 150.00 | 4.50 | |
| 21 | 14 | லட்சுமி கார்டன் | தார் சாலை | 250.00 | 5.00 | |
| 22 | 27 | நீலி கொல்லை 2வது தெரு | சிமெண்ட் சாலை | 150.00 | 3.50 | |
| 23 | 35 | அண்ணாஜி ராவ் தெரு | சிமெண்ட் சாலை | 200.00 | 3.00 | |
| 24 | 35 | ஆலத்தூர் முனிசாமி தெரு | தார் சாலை | 100.00 | 5.00 | |
| 25 | 35 | ஜெயிலர் முனிசாமி தெரு | சிமெண்ட் சாலை | 100.00 | 3.00 | |
| | | | | **4400.00** | | **250.00** |
| | | | சிப்பம் – II | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 14 | விஸ்வநாதன் நகர் | தார் சாலை | 300.00 | 4.50 | 250.00 |
| 2 | 15 | செதுக்கரை பெருமாள் கோவில் தெரு | தார் சாலை | 300.00 | 5.00 | |
| 3 | 15 | ஓம் சக்தி நகர் | தார் சாலை | 150.00 | 5.00 | |
| 4 | 16 | ராஜ கணபதி நகர் | தார் சாலை | 300.00 | 5.00 | |
| 5 | 16 | உண்டியல் தர்மைய்யன் தெரு | தார் சாலை | 130.00 | 4.50 | |
| 6 | 17 | மண்ணடி ராமசாமி தெரு | தார் சாலை | 130.00 | 5.00 | |
| 7 | 22,23 | காந்தி ரோடு | தார் சாலை | 200.00 | 5.00 | |
| 8 | 24 | கௌடண்ய ஆற்று தரைபாலம் மற்றும் மேல்பட்டி ரோடு | தார் சாலை | 140.00 | 5.00 | |
| 9 | 24 | கங்கையம்மன் நகர் | தார் சாலை | 250.00 | 4.50 | |
| 10 | 26 | முருகன் நகர் | தார் சாலை | 100.00 | 5.00 | |
| 11 | 28 | NSK நகர் பாவோடும் தோப்பு | தார் சாலை | 300.00 | 5.00 | |
| 12 | 28 | சன்னதி தெரு | தார் சாலை | 300.00 | 5.00 | |
| 13 | 29 | சன்னதி தோப்பு தெரு | தார் சாலை | 500.00 | 5.00 | |
| 14 | 30 | Match Factory தோப்பு தெரு | தார் சாலை | 200.00 | 5.00 | |
| 15 | 32 | ஆண்டியப்ப முதலி தெரு(வவ்வால் தோப்பு) | சிமெண்ட் சாலை | 50.00 | 4.00 | |
| 16 | 33 | பெரியார் நகர் | தார் சாலை | 250.00 | 5.00 | |
| 17 | 33 | போஸ்பேட்டை புதுதெரு | தார் சாலை | 150.00 | 4.50 | |
| 18 | 35 | நாராயணசாமி தோப்பு தெரு | சிமெண்ட் சாலை | 90.00 | 4.00 | |
| 19 | 36 | தங்கம் நகர் | தார் சாலை | 300.00 | 4.50 | |
| 20 | 3 | வினாயகர் கோவில் தெரு | தார் சாலை | 90.00 | 4.00 | |
| 21 | 3 | நேதாஜி தெரு | தார் சாலை | 200.00 | 5.00 | |
| 22 | 9 | பெரியப்பு முதலி தெரு | சிமெண்ட் சாலை | 90.00 | 4.00 | |
| 23 | 26 | படேசாயுபு தெரு | தார் சாலை | 100.00 | 6.00 | |
| 24 | 29 | புத்தர் நகர் பீமராஜ் நடேச தெரு | தார் சாலை | 100.00 | 4.50 | |
| 25 | 27 | நீலி கொல்லை 3வது தெரு | தார் சாலை | 150.00 | 5.00 | |
| 26 | 25 | பால சுப்ரமணி கோவில் தெரு | தார் சாலை | 150.00 | 5.00 | |
| 27 | 26 | புவனேஸ்வரி நகர் | தார் சாலை | 100.00 | 4.50 | |
| **மொத்தம்** | | | | **5120.00** | | **250.00** |
| **ஆகமொத்தம்** | | | | **9520.00** | | **500.00** |

**<u>அலுவலக குறிப்பு:</u>** மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்:,இ1/1139/2018

22. இந்நகராட்சியில் பல்வேறு அடிப்படைவசதிகள் செய்வதற்கு கீழ்க்கண்ட பணிகளுக்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு அதற்கான நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரு.இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | குடியாத்தம் நகராட்சி பகுதிகளில் ஏற்கனவே கட்டி முடிக்கப்பட்டுள்ள ONSITE Compost தொட்டிகளுக்கு மேற்கூரை அமைத்தல் | 3.00 |
| 2 | செதுக்கரை பெருமாள் கோவில் தெருவில சிறுபாலம் அமைக்கவும், தாந்தோனி அம்மன் தெருவில் பழுதடைந்து உள்ள சிமெண்ட் சாலையை மறுசீரமைத்தல் பணி செய்தல் | 4.50 |
| 3 | ஆசிரியர் காலணி பகுதியில் இரண்டு சிறுபாலம் அமைக்கவும் மற்றும் கீழ்சுதந்திர வீதியில் பழுதடைந்த சிறுபாலத்தை புதியதாக அமைத்தல் மற்றும் வடிகால் அமைத்தல் | 2.90 |
| 4 | காட்பாடி ரோடு நகராட்சி துப்புரவு குடியிருப்பு பகுதியில் உள்ள கழிப்பிடத்தை பராமரித்தல் (ஆண்கள் மற்றும் பெண்கள்) | 3.00 |
| 5 | குடியாத்தம் நகராட்சி பசுமாத்தூர் தலைமை நீரேற்று நிலையம் மற்றும் சந்தப்பேட்டை தலைமை நீரேற்று நிலையத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்ய திரவக்குளோரின் சப்ளை செய்தல | 9.90 |

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம். 2. வரவு செலவு திட்டம் 2018-19-ன் கீழ் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம். வ.எண்.5-ல் காணப்படும் பணிக்கு குடிநீர் நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்:இ1/399/2017

23. குடியாத்தம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலையோரங்களில் வீடின்றி தங்கி உள்ள நபர்களுக்கு தேசிய நகர்புற வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் (NULM) கணக்கெடுப்பு செய்தும், மேற்படி கணக்கெடுப்பு செய்யப்பட்ட நபர்கள் தங்கிக்கொள்ள இத்திட்டத்தின் SUH (Shelter for Urban Homeless)-ன் கீழ் நகராட்சிக்குச் சொந்தமாக காலியாக உள்ள இடத்தில் உறவிடம் அமைப்பது தொடர்பாக 07.08.2018 அன்று வரப்பெற்ற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.2010/2017/UPA2 மற்றும் இதற்குமுன் பெறப்பட்ட கடிதங்கள் மற்றும் இத்திட்டத்தில் தெரிவிக்கப்பட்டு வரப்பெற்ற வழிகாட்டுதல் விவரங்கள் மன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>** (அ) இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலையோரங்களில் வீடின்றி தங்கி உள்ள நபர்களுக்கு மேற்படி திட்டத்தின் கீழ் (NULM) கணக்கெடுப்பு செய்ய ஏற்கனவே அருகில் உள்ள அரக்கோணம், காஞ்சிபுரம் மற்றும் இதர நகராட்சிகளில் கணக்கெடுப்பு செய்து New Spring Charitable Trust 25/89, காமராஜ் சாலை, காஞ்சிபுரம் அவர்களை கணக்கெடுப்பு செய்த உரிய விவரங்கள் அடங்கிய விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யவும், 5 ஆண்டுகள் வரை இந்நிறுவனம் பராமரிப்பு செய்யவும் அனுமதி அளிக்கலாம்.

(ஆ) இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.06, பிளாக் எண்.02, நகரளவு எண்கள் 195 (ம) 196 கொண்ட என்.ஜி.ஓ. காலனி இடத்தில் உள்ள நகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் மத்திய மற்றும் மாநில அரசு வழங்கும் முழுமானியத் தொகையில் கட்டிடம் கட்டவும், அதற்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து சமர்ப்பிக்கவும் அதனைத் தொடர்ந்து எடுக்கப்படும் தொடர் நடவடிக்கைகளுக்கும், மேற்படி பணிகள் செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரவும் ஏற்படும் செலவீனங்களுக்கும், பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் அதன்பின் இத்திட்டத்தின் கீழ் பெறப்படும் நிதியில் ஈடுசெய்துக் கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.2416/2016/எப்1)

24. குடியாத்தம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலையோர வியாபாரிகள் வாழ்வாதாரத்திற்கு தேசிய நகர்புற வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் (NULM) கணக்கெடுப்பு செய்யப்பட்ட நபர்களுக்கு இத்திட்டத்தின் SUSV (Shelter for Urban Street Vendrs)-ன் கீழ் நகராட்சிக்குச் சொந்தமாக காலியாகவும், போக்குவரத்து மற்றும் பொதுமக்களுக்கு இடையூறு இல்லாமல் சாலை ஓரம் மற்றும் காலியாக உள்ள இடங்களில் குடிநீர் வசதி மற்றும் கழிப்பிட வசதிகளுடன் கூடிய தற்காலிக மேற்கூரையுடன் கூடிய இடங்கள் அமைப்பது தொடர்பாக 07.08.2018 அன்று வரப்பெற்ற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை

அவர்களின் கடிதம் ந.க.எண்.2010/2017/UPA2 மற்றும் இதற்கு முன் பெறப்பட்ட கடிதங்கள் மற்றும் இத்திட்டத்தில் தெரிவிக்கப்பட்டு வரப்பெற்ற வழிகாட்டுதல் விவரங்கள் மன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும் பொருள் வைக்கப்படுகிறது.
**அலுவலக குறிப்பு :** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலையோர வியாபாரிகளின் வாழ்வாதாரத்திற்கு பெறப்பட்ட கடிதங்கள் மற்றும் இத்திட்டத்தில் தெரிவிக்கப்பட்டு வரப்பெற்ற வழிகாட்டுதல் விவரங்களின்படி ஏற்கனவே கணக்கெடுப்பு செய்யப்பட்ட நபர்களை விற்பனை செய்யும் பொருட்கள் தொடர்பான Vending Zone தேர்வு செய்து நகராட்சிக்கு சொந்தமாக காலியாகவும், போக்குவரத்து மற்றும் பொதுமக்களுக்கு இடையூறு இல்லாமல் சாலை ஓரம் மற்றும் காலியாக உள்ள இடங்களில் குடிநீர் வசதி மற்றும் கழிப்பிட வசதிகளுடன் கூடிய தற்காலிக மேற்கூரையுடன் கூடிய இடங்கள் அமைப்பது தொடர்பான விரிவான அமலாக்க திட்டம் (Detailed Implementation Plan) தயார் செய்து சமர்ப்பிக்கவும் அதனைத் தொடர்ந்து எடுக்கப்படும் தொடர் நடவடிக்கைகளுக்கும், மேற்படி பணிகள் செய்ய ஏற்படும் செலவீனங்களை பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும், அதன்பின் இத்திட்டத்தின் கீழ் பெறப்படும் நிதியில் ஈடுசெய்துக் கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.2416/2016/எப்1)

25. இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் குப்பை அள்ளும் டிப்பர் வாரிகள் மூலம் குப்பைகள் எடுத்து சென்று உரகிடங்கில் கொட்டப்பட்டு வரப்படுகிறது. மேற்படி குப்பைகள் எடுத்து செல்லும் போது காற்றில் குப்பைகள் பறக்கமல் இருக்க 3 டிப்பர் லாரிகளுக்கு 6 எண்ணிக்கை 15 x 10 அளவு கொண்ட வலைகள் கொள்முதல் செய்ய ஆகும் செலவினம் ரூ.1,26,000/- மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3770/2011/எச்1)

26. இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவின் மூலம் குப்பைகளை சேகரித்து உரகிடங்கில் கொட்டப்பட்டு வரப்படுகிறது, மேலும், On – site Comprosting மற்றும் Mcc (நுண்ணுரக கிடங்குகள்) மூலமாக மக்கும் குப்பையிலிருந்து உரம் தயாரிக்க தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் உரத்தொட்டிகள் கட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. இத்தொட்டிகளில் மக்கும் குப்பை மூலம் விரைவாக உரம் தயாரிக்கும் பொருட்டு, EM Solution தெளிக்கப்பட வேண்டும். இதனைத் கருத்தில் கொண்டு, தொடர்ச்சியாக மக்கும் குப்பையிலிருந்து உரம் தயாரிக்கும் பொருட்டு, EM Solution 500லிட்டர் கொள்முதல் செய்ய ஆகும் செலவினம் ரூ.4,75,000/- மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3770/2011/எச்1)

27. இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவின் மூலம் கொசு ஒழிப்புப்பணி செய்யப்பட்டுவருகிறது. தற்போது மழைக்காலமாக உள்ளதால் மழைநீர் தேக்கம் மற்றும் கால்வாய்களில் அதிக அளவில் கொசு புழு உற்பத்தியாகும் நிலை உள்ளது. எனவே Lemongrass Oil 75 லிட்டர் கொள்முதல் செய்ய ஆகும் செலவினம் ரூ.2,10,000/- மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3770/2011/எச்1)

28. இந்நகராட்சி பகுதியில் டெங்கு தடுப்பு பணிகள் DBC நபர்கள் மூலமாக டெங்கு தடுப்பு பணியில் ஜீலை – 2018 முதல் ஜனவரி – 2019 வரையிலான காலங்களில் ஈடுபடுத்தி கொள்ளவும் அதற்கான உத்தேச செலவின தொகை ரூ.38.00 லட்சத்தினை அனுமதிக்க மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.
**அலுவலக குறிப்பு :** 1. இந்நகராட்சிப் பகுதியில் ஆங்காங்கே டெங்கு நோய் காணப்படுவதால் அதனை தடுப்பதற்கு தடுப்பு பணிகளை செய்ய DBC நபர்கள் ஈடுபடுத்தி தடுப்பு நடவடிக்கை எடுக்க 29.01.2018 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர், வேலூர் அவர்களின் ஆய்வு கூட்டத்தின் போது தற்போது வேலூர் மாவட்டத்தில் பரவலாக "வைரஸ் காய்ச்சல்" உள்ளதால் டெங்கு பணியாளர்கள் நிறுத்தாமல் தொடர்ந்து பணிபுரிய வேண்டும் என தெரிவித்துள்ளார். மேலும், மாவட்ட ஆட்சித் தலைவர் வேலூர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.E2/8441/2016 நாள்: 25.07.2016-ல் Fixation of Rates 2016 – 2017-ம் ஆண்டின் படி, நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.254/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளபடி 01.07.2018 முதல் 31.01.2019 வரையில் DBC நபர்களை டெங்கு தடுப்பு பணியில் ஈடுபடுத்தி வருவதை மன்றம் அனுமதி வழங்காலம். 2. அதற்கான செலவு தொகையை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.431/2012/எச்1)

29. இந்நகராட்சியில் ஒப்பந்தபணிகளில் பிடித்தம் செய்து வைக்கப்படும் வைப்பு நிதியில் ஒப்பந்ததாரர்களின் விண்ணப்பத்தின் பேரில் சம்பந்தப்பட்ட பிரிவு அலுவலர்களின் குறிப்பின்படி வைப்புத்தொகை திரும்ப வழங்கப்பட்டு வருகிறது. தற்போது திரு.டி.டி.ராமகிருஷ்ணன், ஒப்பந்ததாரர் தாம் ஒப்பந்தம் எடுத்த கீழ்க்காணும் பணிகளுக்கான ஒப்பந்தத்தில் செலவுப்பட்டியலில் பிடித்தம் செய்த முன்வைப்பு தொகை மற்றும் காப்பு தொகை கீழ்காணுமாறு பட்டியலிடப்பட்டு திரும்ப வழங்க கோரப்பட்டுள்ளது.

| நாள் | திட்டம் | தொகை ரூ. |
|---|---|---|
| 04.01.08 | பொது நிதி 07-18 | 1100.00 |
| 02.08.09 | பொது நிதி 09-10 | 1250.00 |
| 18.11.09 | பொது நிதி 09.10 | 4500.00 |
| 12.01.10 | பொது நிதி 09-10 | 1355.00 |
| 02.09.10 | பொது நிதி 10-11 | 2000.00 |
| 02.03.11 | பொது நிதி 10-11 | 2000.00 |
| 02.03.11 | பொது நிதி 10-11 | 4000.00 |
| 17.06.10 | பொது நிதி 10-11 | 1000.00 |
| 08.10.10 | பொது நிதி 10-11 | 800.00 |
| 18.10.10 | பொது நிதி 10-11 | 2000.00 |
| 18.10.10 | பொது நிதி 10-11 | 3857.00 |
| 08.07.11 | பொது நிதி 11-12 | 2800.00 |
| 08.07.11 | பொது நிதி 11-12 | 1300.00 |
| 21.07.11 | பொது நிதி 11-12 | 1400.00 |
| 08.09.11 | பொது நிதி 11-12 | 1400.00 |
| 12.04.11 | பொது நிதி 11-12 | 4000.00 |
| 27.08.12 | பொது நிதி 12-13 | 1500.00 |
| 28.07.11 | பொது நிதி 11-12 | 2000.00 |
| 28.07.11 | பொது நிதி 11-12 | 3000.00 |
| 08.05.12 | பொது நிதி 12-13 | 1500.00 |
| 08.05.12 | பொது நிதி 12-13 | 1500.00 |
| 08.05.12 | பொது நிதி 12-13 | 1500.00 |
| 30.03.12 | பொது நிதி 12-13 | 1500.00 |
| 19.07.12 | பொது நிதி 12-13 | 3000.00 |
| 28.05.12 | பொது நிதி 12-13 | 3000.00 |
| 04.06.12 | பொது நிதி 12-13 | 1500.00 |
| | பொது நிதி 10-11 | 1000.00 |
| | **மொத்தம் ரூ.** | **55762.00** |

மேற்குறிப்பிட்ட திட்ட பணிகளுக்கு தணிக்கையில் தடைபத்திகள் நிலுவையில் உள்ள காரணத்தினால் நீண்ட நாட்களாக வழங்கப்படாமல் இருந்தது. தற்போது தணிக்கை தடை பத்திகள் நிவர்த்தி செய்யப்பட்டதன் பேரில் ஒப்பந்ததாரர் திரு.டி.டி.ராமகிருஷ்ணன் அவர்களுக்கு தொகை ரூ.55,762/- திரும்ப வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**கோப்பு எண்:-** எச்3/1725/2018

**ஆணையாளர் / தனி அலுவலர்,**
**குடியாத்தம் நகராட்சி.**